*வினா எண். 70.—திரு. சி. மாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

அ) திருச்சி நகரத்தில் முக்கிய ரோடுகள் அகலப்படுத்தி அழகு படுத்தும் திட்டமுள்ளதா?

ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அ) ஆம்.

ஆ) நகராட்சியால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கு. வடிவேல்: பேரவைத் தலைவரவர்களே, திருச்சி நகரத்தில் மட்டும் இவ்வாறு சாலைகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்பதல்ல. மற்ற நகராட்சிகளிலும் சாலைகள் பழுது பார்க்கப்படாமல் இருக்கின்றன. அதன் காரணம் பற்றி அதிகாரிகளைக் கேட்கிற நேரத்தில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி திருச்சியைப்பற்றியது. ஆகவே திருச்சி சாலை பற்றி மட்டும் தான் கேட்க வேண்டும். பொதுப்படையாகக் கேட்கக் கூடாது..

குடிசைப்பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள்.

*வினா எண். 71—திரு. சு. பாலன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட தயவு செய்து வினாகளுக்கு விடையளிப்பாரா—

அ) தற்போது குடிசைப் பகுதிகளுக்கு மாநகராட்சிக்கு உட்படாத இடங்களில் எம். எம். டி. ஏ. மூலம் அடிப்படை வசதிகள் செய்யப்படுகிறதா?

ஆ) ஆம் எனில், அதன் வேலைகளை யார் மேற்பார்வை செய்வது? செய்யப்படுகிற செலவினத்தை அங்கு வாழும் குடிசை மக்களிடம் பின்னால் வசூல் செய்ய ஏதாகிலும் திட்டமுள்ளதா? அல்லது இலவசமாகச் செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் சென்னை மாநகராட்சிக்கு உட்படாத இடங்களில் உலக வங்கித் திட்ட உதவி கொண்டு சென்னை பெருநகர் வளர்ச்சி ஆணைக்குழு மூலம் செய்து

கொடுக்கும் அடிப்படை வசதிகளை மேற்பார்வை செய்கிறது. அடிப்படை வசதிகள் செய்து முடித்தப் பின்னர் அப்பகுதி குடிசை மக்களிடம் மாதம் ரூ. 10 வீதம் (ரூ. 8 அடிப்படை வசதிச் செலவை ஈடுகட்டும் வகையிலும், ரூ. 2 பராமரிப்பிற்காகவும் வசூலிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. சு. பாலன்: தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியம், வீட்டுவசதி வாரியம் ஆகியவற்றிற்கு உள்ளடங்காத குடிசைப் பகுதியில் அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு உலக வங்கி மூலம் கடன் பெற்று அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு, அக் குடிசை மக்களிடமிருந்து எம். எம். டி. ஏ. மூலமாக வசூல் செய்யப்படுவதாகத் தெரிவிக்கிறார்கள். அதைபோலவே சென்னையில் உள்ள பல குடியிருப்புக்களில் தனியார் வீதிகளை அமைத்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட வீதிகளைச் செப்பனிடுவதற்கு கார்ப்பரேஷனிடம் பெட்டர்மென்ட் டாக்ஸ் கட்டினால்தான் அடிப்படை வசதிகள் செய்து தரப்படும் என்று விதி இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட இடங்களுக்கும் உலக வங்கியின் மூலம் உதவி பெற்று அடிப்படை வசதிகளை அந்த மக்களுக்கும் செய்து கொடுத்து மாதத் தவணையில் அவர்களிடமிருந்து வசூல் செய்ய இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, சென்னையில் இருக்கக்கூடிய இடத்தில் முதலில் செய்துவிட்டு பிறகு மற்ற இடங்களுக்குச் செல்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, குடிசைப் பகுதிகளில் இப்போது என்னென்ன வசதிகள் செய்து தரப்படுகின்றன? அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் சுகாதாரக் கேடான நிலையில் வசிக்கிறார்கள். கழிவறை வசதி இல்லை, போக்குவரத்து வசதி இல்லை, ஆங்காங்கே தண்ணீர் தேங்கி அதிகமான தொல்லைக்கு ஆளாகிறார்கள். கொசுத் தொல்லையும் அதிகமாக இருக்கிறது. இந்த நிலையைப் போக்க உலக வங்கியிடமிருந்து பெறப்படும் உதவியின் மூலம் அவர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்து தரப்படுகின்றன என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன். அந்த நடவடிக்கைகளைத் துரிதமாக இந்த அரசு செய்து தருமா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, மூலக்கேள்வி மாநகராட்சிக்கு உட்படாத இடங்களில் உலக வங்கி மூலமாக உதவி பெற்று அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பது பற்றியது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்

அவர்கள் உலக வங்கி மூலம் பெறப்படும் உதவியால் என்னென்ன வசதிகள் செய்துகொடுக்கிறார்கள் என்று கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். அதற்கு இங்கே ஆங்கிலத்தில் இருப்பதைப் படித்துவிடுகிறேன்.

1) One flush toilet per 10 households.

2) One bathing facility per 10 households.

3) One stand pipe per 10 households.

4) Vehicular access to septic tanks serving centrally located toilets and bath rooms.

5) Vehicular access to within 50 m. of each hut.

6) Paved pedestrian access to each hut.

7) One street light per 40 metres of vehicular roads and footpaths; and

8) One primary school per 3,000 persons and one secondary (high) school per 10,000 persons, etc,.

திரு. வி. கே. கோதண்டராமன்: மாநகராட்சிக்கு உட்படாத இடங்களில் உள்ள குடிசைப் பகுதிகள் என்றுதான் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அப்போது நகராட்சிகளுக்கு உட்படாத குடிசை பகுதிகளுக்கும் உண்டா? தமிழ்நாடு பூராவும் மாநகராட்சி அல்லது நகராட்சிகள் இவற்றிற்கு உட்படாத குடிசைப்பகுதிகளுக்கா அல்லது மாநகராட்சிக்கு உட்படாத குடிசைப்பகுதிகளுக்கு மட்டும்தானா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: சென்னை மாநகராட்சியை மனதில் கொண்டு தான் திரு. பாலன் இக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். பதில் அதையொட்டித் தான்.

திரு. என். கிட்டப்பா: அமைச்சர் அவர்கள் ஆங்கிலத்தில் படித்துக்காண்பித்தார்கள். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற கொள்கை உடைய இந்த அரசு அதிலும் குறிப்பாக தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் என்னைப்போன்று ஆங்கிலம் தெரியாதவர்கள் புரிந்துகொள்கிற வகையில் —— ஆங்கிலத்தில் சொல்வதில் தவறு இல்லை —— தமிழில் அதைச் சொன்னால் புரிந்து கொள்ள வசதியாக இருக்கும். அதை அவர்கள் மேற்கொள்ள ஆவன செய்வார்களா?

1980 பிப்ரவரி 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கிட்டப்பா அவர்கள் எழுப்பிய பிரச்சனை நியாயமாக இருந்தாலும் அவர்கள் கூறியது இந்தக் கேள்வியை ஒட்டியதல்ல. அமைச்சர் அவர்கள் தம் விருப்பப்படி சொன்னார்கள். அதைத் தவிர்த்திருக்கலாம். அவர்கள் தமிழிலேயே சொல்லியிருக்கலாம். இக் கேள்வியை யொட்டியதாக இருந்தால் தமிழில் சொல்லச் சொல்லியிருப்பேன். ஆனால் அவர்கள் சொன்னது இக்கேள்வியையொட்டியதல்ல. எனவே இனிமேல் வருமானால் தமிழிலேயே சொல்ல ஏற்பாடு செய்கிறேன்.

அயோத்தியா நகர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்கல்

*வினா எண். 72 திரு. சென்னை மு. அரங்கநாதன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) திருவல்லிக்கேணி தொகுதியிலுள்ள அயோத்தியா (குப்பம்) நகரில் குடிசைமாற்று வாரியத்தின் சார்பில் கட்டப் பட்ட குடியிருப்புகளில் ஒரு பகுதிக்கு மின்தொடர்பு கொடுக்கப் பட்டு, ஒரு பகுதிக்கு இதுநாள்வரை மின்தொடர்பு கொடுக்கப் படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக மின்தொடர்பு கொடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:—(அ) மற்றும் (ஆ): அயோத்தியா நகரில் 708 குடியிருப்புகள் உள்ளன. இதில் 251 குடியிருப்புகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டதில், தற்போது 111 குடியிருப்புகளில்தான் நிலையான மின் இணைப்பு உள்ளது, குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம் மின் இணைப்புக் கொடுப்பது இப்போது நிறுத்தப்பட்டு விட்டது. மின் இணைப்பு பெற மின்சார வாரியத்திற்கு ஒரு தடையின்மை சான்றிதழ் அளிக்கப்படுகிறது. அதைக் கொண்டு ஒதுக்கீடுதாரர் தாங்களாகவே மின் வசதி பெறலாம்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: ஏற்கனவே அளிக்கப் பட்டமுறையிலே அங்கிருக்கிற அத்தனை குடியிருப்புகளுக்கும் மின்வசதி செய்துதர இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின்வசதி பற்றிக் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உண்மையாகவே மின்வசதி வேண்டுமென